(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 67 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, பெப்புருவரி 05, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0064 / ' 08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) மிஹின் விமானச் சேவையினால் விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் வாடகைக்கமர்த்தப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) விலை மனுக்கோரல் நடைமுறை மூலமாகவா இவை தெரிவு செய்யப்பட்டன என்பதையும்,

(iii) ஆமெனில், விலை மனுக்கோரலை சமர்ப்பித்திருந்த கம்பனிகளது பெயர்களையும், தெரிவு நடைமுறைகளையும்,

(iv) இதனைத் தீர்மானித்த நபர் யார் என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) விமானப் பணியாளர் இன்றியும், விமானப் பணியாளர்களுடனும் என்ற அடிப்படையில் வாடகைக்கமர்த்தப்பட்ட பொழுது மாதாந்தம் அறவிடப் பட்ட கட்டணம் எவ்வளவு என்பதையும்,

(ii) இது தொடர்பில் நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றனவா என்பதையும்,

(iii) கணக்காய்வாளர்களினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதித் தெரிவுக்கான குழுவையும் அதன் விதப்புரைகளையும்,

(iv) இங்கு பணியாற்றுகின்ற பணியாட்தொகுதி உறுப்பினர்களது எண்ணிக்கையையும்,

(v) அவர்களது சம்பள அளவுத்திட்டம் அதனால் கம்பனிக்கு ஏற்படுகின்ற தாக்கம் என்னவென்பதை மாதாந்த அடிப்படையிலும்,

(vi) மிஹின் விமானச் சேவையின் இன்றுவரையிலான கணக்குகளையும்,

(vii) அரசாங்கத்திடமிருந்து மிஹின் விமானச் சேவைக்கு மாற்றப்பட்ட பணம், அவ்வாறு மாற்றிய திகதி ஆகியவற்றையும்,

(viii) எந்த தலைப்பிலிருந்து பணம் மாற்றப்பட்டது என்பதையும், பாராளுமன்றம் ஒப்புதல் அளித்த திகதியையும்,

(ix) ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் மிஹின் எயார் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்ட செலவுத்தலைப்புகளையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) மிஹின் எயார் லிமிட்டெட்டின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட, திறைசேரி மற்றும் மிஹின் எயார் பிரதான அதிகாரிகளது பெயர்கள் என்னவென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) பணம் சட்ட ரீதியாக ஒதுக்கப்படவில்லை என்பதையும், எனவே சகல அதிகாரிகளும் பொது நிதியை பிழையாக பயன்படுத்திய குற்றத்திற்கு ஆளாவார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0071 / ' 08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அதிமேதகு சனாதிபதி வெளிநாட்டுக்கு மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கையினையும்,

(ii) நாடுகளின் பெயர்களையும்,

(iii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iv) உடன் சென்றமைக்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வெளிநாட்டுப் பயணங்களுக்காக ஏற்பட்ட செலவையும்,

(ii) அந்தப் பயணங்களினால் நாட்டுக்குக் கிடைத்த குறிப்பிடத்தக்க பயனையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0097 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு நவெம்பரில் மேதகு சனாதிபதி ஈரானுக்கு மேற்கொண்ட பயணத்திற்கான மொத்தச் செலவையும்,

(ii) உடன் சென்றவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) அதனால் நாடு பெற்றுக்கொண்ட நன்மைகளையும்,

(iv) அவை என்னவென்பதையும் மற்றும் அவற்றின் அளவையும்,

(v) இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட அளவையும்,

(vi) இன்னும் பெற்றுக்கொள்ளப்படவிருக்கின்ற எண்ணிக்கையை அதன் திகதி வாரியாகவும்,

(vii) அவ்வுதவிகள் எத்துறைகள் சார்ந்தவை என்பதையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இதற்குப் பதிலாக, ஈரானுக்கு நாம் என்ன வழங்கினோம் என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0527 / ' 08

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச் சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) "மிஹின் ஏயார்" விமானக் கம்பனிக்குச் சொந்தமான விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்ட விமானங்களா அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்டவையா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவை கொள்வனவு செய்யப்பட்டவை என்றால் பின்பற்றப்பட்ட கொள்வனவு நடைமுறை யாதென்பதையும்

(ii) கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்கள் இருப்பின், எப்போது பெறப்பட்டதென்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின், அது எப்போதென்பதையும்,

(iii) அவ்வாறு பெறப்பட்ட விமானங்களுக்கான பணம் செலுத்தப்பட்ட அடிப்படை, செலுத்தப்பட்ட தொகை மற்றும் அதற்கான நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட விமானங்களுக்காக இற்றைவரை செலுத்தப்பட்ட தொகை மாதரீதியாக தனித்தனியாக எவ்வளவென் பதையும்,

(ii) நிலுவைத் தொகை இருப்பின், அது எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0769 / ' 08

5.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி, நியாகம சுகாதார மருத்துவ காரியாலயத்தில் தற்போதைய ஊழியர் குழாமின் எண்ணிக்கை யாது,

(ii) அப்பிரதேச சனத்தொகையின்படி இருக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை யாது,

(iii) அதன் பிரகாரம் இருக்கவேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையிலுள்ள வித்தியாசம் வெவ்வேறாக யாது,

(iv) ஊழியர்களின் போக்குவரத்துச் செலவினங்கள் அடங்கலாக கொடுப்பனவுகள் நிலுவைகளேதுமின்றி செலுத்தப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) நியாகம சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்குரிய பிரிவுகளில் அமைந்துள்ள கிராமோதய சுகாதார நிலையங்கள் எத்தனை,

(ii) அவற்றில் நீர், மின்சாரம், நிறை பார்க்கும் உபகரணங்கள் மற்றும் வருகை தரும் தாய்மார்களுக்கான ஆசன வசதிகள் முழுமையாக உள்ளனவா,

(iii) மலசலகூடங்கள் அமைக்கும்போது, இத்திட்டத்தின் கீழ் தேவைப்படும் மலசலகூட வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்காரியாலயத்தில் வாகனவசதிகள் உள்ளனவா,

(ii) அதற்கென மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருளின் அளவு எவ்வளவு,

(iii) இது கடமைப் பிரயாணங்களுக்குப் போதுமானதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களுக் குரிய மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா,

(ii) இன்றேல், எவ்வளவு காலத்தில் அவை வழங்கப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0779 / '08

6.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பத்தேகம, கினிமெல்லகஹவில் அமைந்துள்ள "சான்ட்லங்கா கென்பெக்ஷ னரிஸ்" உள்ளூர் தொழிற்சாலை என்ற வகையில் பெருந்தொகையானவர் களுக்கு தொழில் வழங்கி நடத்தப்படுகிறது என்பதையும் ,

(ii) முக்கலை மின்சாரம் இன்மையால் அத்தொழிற்சாலையின் கொள்ளளவை அதிகரிக்கமுடியாதுள்ளதென்பதையும்,

(iii) முக்கலை மின்சாரம் பெற்றுத் தரும்படி இலங்கை மின்சார சபையிடம் கோரியிருந்தாலும் சில மீற்றர் தூர வித்தியாசம் காரணமாக இற்றைவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இதனால் புதிய மின்மாற்றி ஒன்றைப் பொருத்தி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பது சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) தற்பொழுது உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக அத்தகைய பெருந்தொகையான பணத்தை ஒரே நேரத்தில் முதலீடு செய்ய முடியா தென்பதையும்,

(ii) உள்ளூர் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் மஹிந்த சிந்தனை வேலத்திட்டத்தின் கீழ் இத்தொழிற்சாலைக்கு மின்சார உப நிலையம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தால் இன்னும் பெருந்தொகையானவர்களுக்குத் தொழில் பெற்றுக் கொடுக்கமுடியும் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) இந்த நிலைமையைக் கவனத்திற் கொண்டு உள்ளூர் கைத்தொழிலைப் பாதுகாக்கும், மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் புதிய மின்சார உப நிலையம் ஒன்றை அமைப்பதற்குச் செலவாகும் பணத்தில் ஒரு பகுதியையாவது வழங்குவதற்குச் சாத்தியமுண்டா என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0889 / '08

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் விளைவாக தமது வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அழிவுக்குள்ளாகிய வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அரசாங்கத்தின் தலையீட்டினால் இற்றைவரை நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொண்டுள்ள அல்லது நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்வதற்கு நட்டஈடு பெற்றுக்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்ப தையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நேரடியான அரச தலையீடு இல்லாமல் பல்வேறு அமைப்புகளினதும் நபர்களினதும் முயற்சிகளினால் நிரந்தர வீடுகளை பெற்றுக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்வாறு, நிரந்தர வீடொன்றை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான பிரச்சினையை தீர்த்துக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) சுனாமி பேரழிவு காரணமாக வீடுகளை இழந்த, ஆயினும், இற்றைவரை நிரந்தர வீடுகள் கிடைக்காதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) சுனாமியின் நிமித்தமாக வீடுகளை இழந்தநிலையில் தற்காலிக குடியிருப்பு களில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0890 / '08

8.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2004, திசெம்பர் 26 ஆம் தேதியளவில் சுனாமி அனர்த்தத்தின் போது இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) சுனாமியின் விளைவாக இலங்கை அரசுக்கு இற்றைவரை நிதி ரீதியாகக் கிடைத்த உதவித் தொகை (கடன் அல்லாத) எவ்வளவென்பதையும்,

(iii) செலுத்தப்படவேண்டியிருந்த கடன் தொகைகளில் சம்பந்தப்பட்ட நாடுகளின் இணக்கத்துடன் செலுத்தாமல் பதிவழிக்கப்பட்ட வெளிநாட்டு கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இதற்கேற்ப, 2004, திசெம்பர் 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி பேரழிவையடுத்து ஏற்கனவே செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையிலிருந்து விலக்களிக்கப் பட்ட கடன் தொகை எவ்வளவென் பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவு ஏற்பட்டதன் விளைவாக இலங்கை அரசுக்கு நிதி ரீதியிலான உதவிகளை (கடன் அல்லாத) வழங்கிய வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் நாடுகள் யாவையென்பதையும்,

(ii) வழங்கிய பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) சுனாமி நிமித்தமாக அரசு செலுத்தவேண்டியிருந்த கடன் தொகையை பதிவழித்த அமைப்புகள் அல்லது நாடுகள் யாவையென்பதையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0891 / '08

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008 சார்க் மாநாட்டிற்கு அண்மித்த காலப்பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாக அல்லது பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பு மாவட்டத்தில் தகர்த்து அகற்றப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவை எவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன என்பதையும்,

(iii) இதனால் குடியிருப்புகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்ப தையும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தகர்த்து அகற்றப்பட்டதன் விளைவாக வீடுகளை இழந்த எத்தனை குடும்பங்களுக்கு அரச தலையீட்டுடன் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்ட தென்பதையும்,

(ii) எத்தனை குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0939 / '08

10.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 170/7) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையின் போது மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வள வென்பதை அவர் இச்சபை க்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0985 / '08

11.

கௌரவ ஜினதாஸ கிதுலகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமத்திய மாகாண முதலமைச்சர் அவர்கள் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக கடந்த மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவருக்கு இலஞ்சமாக மொன்டேரோ வாகனமொன்றை வழங்கினார் என்று 2008.08.17 ஆம் திகதி "லங்கா" வாராந்த பத்திரிகை உட்பட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் செய்திகள் வெளிவந்ததை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறெனின், இலஞ்சம் பெறுதல் மற்றும் இலஞ்சம் கொடுத்தல் என்பன தண்டனைக்குரிய பாரிய குற்றங்கள் என்பதனால் குறிப்பிட்ட மாகாண சபையின் முதலமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாவிட்டால் அதற்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0997/ '08

12.

கௌரவ வை.எம்.நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2007 திசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை யாது,

(ii) அவர்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த.) பரீட்சைக்குத் தமைமை பெற்றோர் எண்ணிக்கை யாது,

(iii) இப்பரீட்சையில், சித்தி அடையாதோர் எண்ணிக்கை மற்றும் அதன் நூற்றுவீதம் என்ன,

(iv) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடையாத பாடசாலைகள் உள்ளனவா,

(v) அவ்வாறாயின், அப்பாடசாலைகள் யாவை,

(vi) இப்பாடசாலைகளில் இந்நிலைமை ஏற்படுவதற்கான காரணங்கள் பற்றி விசாரிக்கப்பட்டதா,

(vii) இது தொடர்பாக வழங்கப்பட்ட பரிகாரங்கள் உள்ளனவா,

(viii) அவ்வாறாயின், அவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0998 / ' 08

13.

கௌரவ வை.எம். நவரத்ன பண்டா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008ஆம் ஆண்டில் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது,

(ii) அப்புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை என்ன வீதம்,

(iv) அப்பரீட்சையில் 0 புள்ளி (பூஜ்யம் புள்ளி) பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதன் வீதமும் யாது,

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் போன்ற அனைத்து தரப்பினரையும் மன அழுத்தத்துக்குள்ளாக்குகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அதற்கான மாற்றுத் தீர்வு சம்பந்தப்பட்ட அமைச்சிடம் இருக்கின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0999 / ' 08

14.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ரம்புக்கனை, யட்டகம, துன்தொட்ட பாலத்துக்கருகில், மா ஓயாவில் அனுமதி இல்லாமல் மணல் அகழப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக ரம்புக்கனை, யட்டகம ஜி. டி. அலோசியஸ் சப்பரமாது என்பவரால் 2008.02.29 ஆம் திகதி முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த அனுமதியற்ற மணல் அகழ்வு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) இந்த மணல் அகழ்வு நிறுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1007 / ’08

15.

கௌரவ ஜோன்ஸ்டன் பெர்னாந்து,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை வங்கியின் போக்குவரத்து முகாமையாளராக குலசேகர என்பவர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார் என்பதையும்,

(ii) இலங்கை வங்கிக்குச் சொந்தமான 3 வாகனங்களை அவர் தனது தனிப்பட்ட உபயோகத்திற்கு ஈடுபடுத்திக்கொண்டுள்ளார் என்பதையும்,

(iii) இலங்கை வங்கிக்குச் சொந்தமான ப்ராடோ வகையைச் சேர்ந்த சில ஜீப் வண்டிகள் தற்போது காணாமல் போயுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வங்கிக்குச் சொந்தமான சொத்துக்களை தவறான முறையில் நாசமாக்கும் போக்குவரத்து முகாமையாளருக்கு பின் திகதியிட்டு வாகனங்களை பயன்படுத்து வதற்காக அனுமதியளிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படடுள்ள போக்குவரத்து முகாமை யாளரான குலசேகர என்பவர் இலங்கை வங்கிக்குச் சொந்தமான வாகனங்களை தவறாக கையாளுவது மற்றும் வாகனங்களை காணமல் போகச்செய்வது ஆகியன தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா?

(ஈ) இன்றேல் , ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1) ,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2) ,— இப் பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 பெப்புருவரி மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்றத்தின் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்கான தெரிகுழு,— பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியின் தற்போதைய நிலையினைப் பரிசோதனை செயவதற்காக 2005 பெப்புரவரி மாதம் 08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 யூலை மாதம் 25 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 ஓகத்து மாதம் 31 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*9.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2009.1.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2008, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1579/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி.)

*17.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 6 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 06

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “பண்டகசாலை முற்பணக்கணக்கு” — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை ரூபா 1,100,000,000 இலிருந்து ரூபா 1,500,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2008.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2009.01.12.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006, மே மாதம் 31 ஆந் திகதிய 1447/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*19.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2006, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1469/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2007, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 1513/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*21.

மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரும்,— இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008, மே மாதம் 05 ஆந் திகதிய 1548/ 7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக'' எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*28.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

கொலன்னாவ பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

34.

இலவச பாலர் பாடசாலை அத்துடன் நலன்புரித்தொகுதி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

36.

றங்கா கலை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொளண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0940 / '08

1.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 170/13) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப் படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வள வென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0941 / '08

2.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 171/5) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படை யினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0942 / '08

3.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் நடைபெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 171/12) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0943 / '08

4.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடைபெற்ற வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் மரணமடைந்த மற்றும் காயமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படையினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்ட மரணமடைந்தவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படுமாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0944 / '08

5.

கௌரவ (திருமதி) ரேணுகா ஹேரத்,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் நடைபெற்ற அவசர காலச்சட்ட விவாதத்தின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கிணங்க (ஹன்சாட் பிரதி இலக்கம் 174/1) வடக்கு கிழக்கு யுத்த நடவடிக்கைகளின்போது குறித்த கால எல்லையில் மரணமடைந்த தரைப்படையினர், கடற்படையினர், விமானப்படை யினர் மற்றும் பொலிசாரின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்கள் இணைக்கப்பட்டிருந்த முகாம் அல்லது சேவை நிலையம் யாது,

(ii) மரணமடைந்த / காயமுற்ற வேளையில் அவர்கள் சேவையில் ஈடுபட்டிருந்த நடவடிக்கை மற்றும் மரணமடைந்த தினம் யாது,

(iii) அவர்களின் பெயர்கள் மற்றும் தனிப்பட்ட முகவரிகள் யாவை,

(iv) இவர்களில் தங்கிவாழ்பவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவு எவ்வளவு

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிட்டவர்களுக்காக சம்பளமும் ஓய்வூதியமும் செலுத்தப்படு மாயின் அக்கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் யாவர்,

(ii) அது எப்பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் மூலமாக

என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---